**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 342/2022**

பெயர் : கமலக்கண்ணன் (PW2)

த/க/பெ. :

தேதி : 19.08.2024 (திங்கள்)

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகள் மீது ரவி வழக்கு போட்டுள்ளார். என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்பது தெரியவில்லை. எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளார் என்பது தெரியவில்லை. ரவிக்கு வழக்கு சொத்து அவரது அப்பா மூலம் கிடைத்தது. தாவா சொத்து எந்த வகைபாட்டை சேர்ந்தது என்பது எனக்கு தெரியாது. 2019ம் ஆண்டு செட்டில் மண்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. அந்த செட்டில் மண்ட் பாத்திரத்தை நான் நேரில் பார்த்ததில்லை வாதி சொல்லிஉள்ளார். தாவா சொத்தின் பரப்பளவு தெரியவில்லை. சென்னையில் வசித்த சண்முகம், நடராஜன், கண்ணையன் ஆகியோருக்கு பெருந்தோட்டத்தில் நிறைய சொத்துக்கள் உள்ள விபரம் தெரியும். மேற்படி நபர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் அது குறித்து தெரியவில்லை. மேற்படி நபர்கள் எழுதிக் கொடுத்ததாக 08.04.2024 ஒரு கிரய ஆவணம் ராமமூர்த்தி என்பவருக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்ற விபரம் தெரியாது. அந்த ஆவணம் 21.05.2024ல் ரத்து செய்யப்பட்டது என்றால் தவறாக பதிவு செய்ததால் ரத்து செய்யப்பட்டது. அந்த ஆவணத்தில் நடராஜன் பிள்ளை என்று நான் ஆள்மாறாட்டம் செய்து கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இதே சொத்துக்கள் மீது வாதி ஜெய்சங்கர் என்பவர் மீது சீர்காழி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார் என்றால் கேள்விபட்டேன். 2 முதல் 4 பிரதிவாதிகளின் சகோதரர் ஜெய்சங்கர் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்கள் அதனை சார்ந்த பட்டா நிலங்கள் சண்முகம் வகையறாவிற்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் வாதி ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வழக்கு சொத்தை முதல் பிரதிவாதியிடம் இருந்து 50 ஆயிரம் பணம் கொடுத்து ரவி என்பவர் அக்ரிமெண்ட் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. எந்த முறையில் வாதி சொத்தை அனுபவித்து வருகிறார் என்ற விபரத்தை என் முதல்

விசாரணையில் சொல்லவில்லை. என்ன தேதியில் வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகள் கிரயம் கேட்டார்கள் என்றால் ஆகஸ்ட் 2020. இருதரப்பிற்கும் பிரச்சனை நடந்தது. பிரதிவாதிகள் ரவி வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்தார்கள். இரண்டு தரப்பினரும் போலிஸ் புகார் கொடுத்துள்ளார்களா என்று தெரியவில்லை. ரவி வீட்டில் பிரச்சனை செய்த விபரத்தை நிருபணவாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன். வழக்கு சொத்துக்கள் மற்றும் அதை சார்ந்த பட்டா நிலங்கள் சென்னையில் வசித்த சண்முகம் வகையறாவிற்கு சொந்தமானது என்றாலும் அவர்கள் மூவரும் இறந்து விட்டார்கள் என்றாலும், அவர்கள் வாரிசுகளிடம் இருந்து ஜெய்சங்கர் அக்ரிமெண்ட் மூலம் வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2019 ல் ரவி குடும்பத்தில் ஏற்பட்ட செட்டில் மெண்ட் ஆவணம் ரவி பெயரிலான பட்ட ஆகியவை செல்ல கூடியவை அல்ல என்றால் சரியல்ல. வாதியின் கணவர் ரவி தனது செல்வாக்கின் அடிப்படையில் வா.சா.ஆ. 1 முதல் 4 வரையிலான ஆவணங்களை பெற்று அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றாலும், வாதி வசத்தில் உள்ளதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. நான் ரவி மற்றும் சுதாவிடம் பணம் வாங்கிக் கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.